# சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.173/2023** **தேதி.05.08.2024**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 05.08.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | தினேஷ் குமார் |
| த/பெ. | : | வெற்றி அழகன் |
| வயது | : | 35/2024 |
| தொழில் | : | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கிளை மேலாளர் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | வேப்பூர் |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். பிரதிவாதி 09.06.2020 அன்று எங்கள் வங்கிக்கு கடன் கேட்டு வழங்கிய கடன் விண்ணப்பம் **வா.தா.சா.ஆ.1** ஆகும். 09.06.2020 அன்று பிரதிவாதி எங்கள் வங்கியிடம் ஏற்படுத்திக்கொண்ட கருதுகோள் ஒப்பந்தம் **வா.தா.சா.ஆ.2** ஆகும். 09.06.2020 அன்று பிரதிவாதி எங்கள் வங்கியில் பெற்றுக்கொண்ட ஏற்பாடு கடிதத்தின் நகல் **வா.தா.சா.ஆ.3 ஆகும்.** பிரதிவாதி எங்கள் வங்கியில் வைத்துள்ள அவரது பெயரில் உள்ள வங்கி கணக்கின் ஸ்டேமெண்ட் ஆப் அக்கவுண்ட் **வா.தா.சா.ஆ.4 ஆகும்.** தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.